1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அத்தகைய வீடுகள் கட்டப்படவில்லை என்றாலும், ஒரு சிறப்பு நிலையாக—எங்களது மாவட்டத்தில் ஏலகிரி மட்டுமே கொஞ்சம் குளுகுளுவென்று இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட அங்கே வந்து ஓய்வு எடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஓய்வு எடுக்கவில்லை. உங்கள் தொகுதிக்கு வந்தேன் அப்போது கூட்டிக் கொண்டுபோய் காண்பித்தீர்கள்.

திரு. கி. தருமலிங்கம்: நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கோருவது எல்லாம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்படவில்லை என்றாலும், இளம் தம்பதிகளுக்கு தேனிலவு இல்லமாவது கட்டி கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனிலவு இல்லங்கள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் எதுவும் தமிழக அரசின் வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 411, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 412, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

412—

தேனிலவு தோட்டம் திட்டம் செயல்படுத்துதல்

***35310**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டி, கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் தேனிலவு தோட்டத் திட்டம் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தேனிலவு தோட்டத் திட்டத்தை ஊட்டி, கொடைக்கானல்., ஏற்காடு ஆகிய மலைப் பகுதிகளில் நிறைவேற்ற அரசு ஆணை வழங்கியுள்ளது.

[1995 ஏப்ரல் 24

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் பல இடங்களில், இதுபோன்ற தேனிலவு தோட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுகின்றன. தம்பதிகள், தங்களுடைய பிறந்தநாள் மற்றும் திருமண நாள் போன்ற விஷேச நாட்களில் வந்து அந்தத் தேனிலவு தோட்டங்களில் தங்களுக்குப் பிடித்தமான மரக்கன்றுகளை நடுகின்றார்கள். தங்களால் இயன்ற அளவுக்கு, போதுமானத் தொகை கொடுத்து அந்த மரக்கன்றுகளை நடுவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துகின்றார்கள். தேனிலவு தோட்டங்களில் இதுபோன்ற மரக்கன்றுகளை நடும்போது, அவர்களுடைய பெயர் பலகைகள் அங்கே வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற இடங்களில் தேனிலவு தோட்டங்கள் அமைக்கப்பட இருப்பதாக தெரிவித்துள்ளார்கள். அதேபோன்று இதற்கு முன்னர் எழுப்பப்பட்ட கேள்விக்கு நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தருமலிங்கம் கேட்டதுபோல் ஏலகிரி மலையிலே இதுபோன்ற திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்றும், இந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், தமிழகத்திலே, தேனிலவுத் தோட்டத் திட்டம் என்று, 3-8-1993-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஊட்டியிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தாவர இயல் பூங்காவிற்கு, பல்வேறு நாடுகளைச் சார்ந்தவர்கள் பிற மாநிலங்களைச் சார்ந்தவர்கள் சுற்றுலாப் பயணிகளாக வருகிறார்கள். அதுபோன்று இளம் தம்பதியினரும் அங்கே வருகிறார்கள். மணிவிழாக் காணத்தக்க வயதுடைய பெரியவர்களும் அங்கே வருகிறார்கள். அவர்களெல்லோரும் தங்களுடைய பிறந்த நாள் அல்லது திருமண நாள் போன்ற நினைவுநாளிலே ஒரு மரத்தை நடவேண்டுமென்று விரும்பி அங்கே இருக்கக்கூடிய தோட்டக்கலை, மாவட்ட இணை இயக்குநரிடத்திலே தங்களுடைய பெயரைப்பதிவு செய்து, ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டி விட்டால், அவர்கள் எந்த மரத்தை நடவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதே மரக் கன்றுகளை நாங்கள் தருகிறோம். அந்த மரக் கன்றுகளை நட்டுவிட்டு, தங்களுடைய பெயர், முகவரி குறித்த பலகையையும் அங்கே வைக்கிறார்கள். அந்த ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொண்டு, அந்த மரம் பராமரிக்கப்படும். 10 ஆண்டுகளுக்குப் பிறகு,அந்த மரத்திற்கு ஒருநாள் சிறப்புநாளாக விழா நடத்தப்பட்டு, அந்தத் தம்பதியினரையோ, நட்ட மரத்திற்குச் சொந்தக்காரரையோ அழைத்து, அன்றைக்கு அதனுடைய வளர்ச்சி காண்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 24]

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறிய நாடாக ஸ்பெயின் நாடு இருக்கிறது. அந்த நாட்டினுடைய மக்கள் தொகை 4 கோடிதான். ஆனால், அங்கு இதுபோன்ற தேனிலவுத் தோட்டங்கள் உட்பட சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய திட்டங்கள் அமல்படுத்தப்படுவதினால், ஆண்டிற்கு 6 கோடி சுற்றுலாப் பயணிகளை அந்த நாடு கவருகிறது. பிரிட்டனில், சர்வதேச தாவர இயல் பூங்கா பாதுகாப்பு அமைப்பிற்கு, தமிழகத்தில் அமைக்கப்படும் தேனிலவுத் தோட்டங்கள் பற்றிய தகவல் தரப்படுமேயானால், உலகின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த வெளிநாட்டு தம்பதியினர், தேனிலவுத் தோட்டங்களில் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, மரக்கன்றுகளை வைப்பதற்கு முன்வருவார்கள். தமிழகத்தில், இயற்கை எழில் கொஞ்சும் மலைப் பிரதேசங்கள், மனதைக் கொள்ளைகொள்ள வைப்பனவாகும். அந்தப் பகுதிகளில், தேனிலவுத் தோட்டங்களுக்கு நல்ல வரவேற்பும் கிடைக்கும். எனவே, அந்தத் தேனிலவுத் தோட்டங்களில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையில், அனைத்து வசதிகளுடன்கூடிய, சிறிய நவீன சொகுசான 'காட்டேஜ்' எனப்படும் குடில்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதையும், இயற்கை எழில்மிக்க மற்ற பகுதிகளிலும், தேனிலவுத் தோட்டங்கள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனிலவை நோக்கி வரக்கூடிய தம்பதியினர்க்கு, தங்குவதற்கான இடவசதியைத் தரக்கூடிய பொறுப்பு வேளாண்மைத் துறையிலே இல்லை. ஆனால், அவர்கள் தங்களுடைய சிறந்த நாளாக எந்நாளை விரும்புகின்றார்களோ, அந்த நாளைக் குறிக்கிற வகையில் அவர்கள் ஒரு மரத்தை நடவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்றைக்கு, ஊட்டியிலே நிறைய பேர் அதற்காக தங்களுடைய பெயரைப் பதிவு செய்திருக்கிறார்கள். மரங்களை நட்டுமிருக்கிறார்கள். இந்தவகையில் தன்னுடைய தாய், தந்தையரின் திருமண நாளின் நினைவையொட்டி, அவர்களது மகன் ஒரு மரத்தை நட்டிருக்கிறார். ஒவ்வோராண்டும், அங்கே வந்து, அவருடைய தாய் தந்தையார் அந்த மரத்திலே வாழ்வதாக நினைத்து, அங்கே ஒருநாள் முழுக்க அமைதியாக மௌன விரதம்கூட இருந்து வருகிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயுள்ள புதுமணத் தம்பதிகள் அனைவருடைய முகவரிகளையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரித்துத் தெரிந்து, தேனிலவுத் தோட்டத் திட்டத்தினைப் பயன்படுத்த முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக திருமணம் செய்கின்ற அந்த இனிய நாளை அழைப்பிதழ் தந்து, அத்திருமணத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைப்பார்கள். அது மரபு. அதுதான் எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் தெரிகிறது. ஆனால் யாருக்கு என்று தேனிலவு என்பதையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்கக்கூடிய பொறுப்பு எங்களிடத்திலே இல்லை; எங்களுக்கு அது வேலையும் அல்ல. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 413, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

413—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

***37935**—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:*

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயல்குடி முதல் ஆர்.எஸ். மங்கலம் வரை கிட்டத்தட்ட 160 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அதோ போல் பரமக்குடியிலிருந்து இராமேஸ்வரத்திற்குக் கிட்டத்தட்ட 150 கிலோமீட்டருக்கு மேற்பட்ட தொலைவிலிருந்து பால் வரவேண்டியிருக்கிறது. இராமேஸ்வரம் போன்ற பகுதிகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் வருவதால், அங்கே பால் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, இருக்கின்ற பாலைக் குளிரூட்டி, பாதுகாப்பாக வைத்து, மக்களுக்கு வினியோகம் செய்வதற்காக, இராமநாதபுரம்